Ontario

# பாதிக்கப்பட்டவருக்கு/சாட்சி சொல்பவருக்கு உதவும் திட்டம் (The Victim/Witness Assistance Program)

**பாதிக்கப்பட்டவருக்கு/சாட்சி சொல்பவருக்கு உதவும் திட்டம் என்றால் என்ன?**

வன்முறையான குற்றமொன்றால் நீங்கள் பாதிக்கப்பட்டிருந்தால் அல்லது அதற்கு சாட்சியாக இருந்தால், அநேகமாக நீங்கள் நீதிமன்றத்திற்கு செல்லவேண்டிய தேவை ஏற்படலாம்.

இது கடினமானதும் குழப்பமானதுமான ஒரு அனுபவமாக இருக்கலாம். கிறிமினல் நீதிமன்றத் தொகுதி பற்றியும் உங்களிடம் என்ன எதிர்பார்க்கப்படும் என்பது பற்றியும் உங்களுக்கு நிறைய கேள்விகள் இருக்கக்கூடும்.

**உங்களுக்கு உதவி வழங்கவே பாதிக்கப்பட்டவருக்கு/சாட்சி சொல்பவருக்கு உதவும் திட்டம் இருக்கிறது.** நாங்கள் உங்களுடன் கதைத்து உங்களுடைய வழக்கு மற்றும் தேவைகளுக்கு ஏற்றவாறு உதவிகளை வழங்குவோம்.

எமது சேவைகள், போலீசார் குற்றங்களை சுமத்தியதிலிருந்து ஆரம்பித்து நீதிமன்ற வழக்கு முடியும்வரை தொடரும்.

**யாருக்கு உதவி கிடைக்கப்பெறும்?**

குடும்ப வன்முறை, சிறார் துஷ்பிரயோகம், பாலியல் தாக்குதல், முதியோர் துஷ்பிரயோகம், கொலை, இனவாத குற்றம் போன்ற வன்முறைக் குற்றங்களால் பாதிக்கப்பட்டு அவல நிலையிலிருப்பவர்களுக்கும் சாட்சி சொல்பவர்களுக்கும் முற்சலுகை அடிப்படையில் சேவைகள் வழங்கப்படுகின்றன.

மேலுமாக, கீழ்க்காண்பவர்களுக்கும் நாங்கள் உதவி வழங்குகிறோம்:

- விசேஷ தேவையுள்ள பாதிக்கப்பட்டோர்
- கொலை செய்யப்பட்டவரின் குடும்பங்கள்
- கிறிமினல் குற்றச் சாட்டுகளில் முடிவடையும் வாகன விபத்தில் உயிரிழந்தவரின் குடும்பங்கள்.

வயதிற்கு ஏற்ற தகவலும் சேவைகளும் பிள்ளைகளுக்கு கிடைக்கப்பெறும்.

**நான் உதவியைப் பெற்றுக்கொள்வது எப்படி?**

ஒருவர்மீது குற்றச்சாட்டுகள் பதியப்பட்ட பின்னர், பாதிக்கப்பட்டவர்களும் சாட்சிசொல்பவர்களும் உதவிபெறும் முகமாக, போலீஸ் அல்லது அரச தரப்பு வக்கீலால் இந்தத் திட்டத்திற்கு சிபாரிசு செய்யப்படுவார்கள். வன்முறையான குற்றமொன்றால் நீங்கள் பாதிக்கப்பட்டிருந்தால், இந்தத் திட்டத்தால் உதவி பெற நீங்களாகவே அவர்களை அழைக்கலாம் அல்லது சமூகத்தில் உள்ள ஒருவரை உங்கள் சார்பாக அழைக்கும்படி கேட்கலாம். ஆதரவு வழங்கவும் ஏதாவது பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகளுக்கு பிரதிபலிப்பதற்கும் கூடிய விரைவில் பணியாளர்கள் உங்களைத் தொடர்புகொள்ள முயற்சிசெய்வார்கள்.

**இதற்கு எவ்வளவு செலவாகும்?**

ஒன்டாரியோ முழுவதிலும் இந்த சேவைகள் இலவசமானவையாகும்.

**என்ன விதமான உதவிகள் கிடைக்கப்பெறும்?**

பாதிக்கப்பட்டவருக்கு/சாட்சி சொல்பவருக்கு உதவும் திட்டத்தால் பின்வருவனவற்றை செய்ய முடியும்:

- கிறிமினல் நீதி பரிபாலனம், நீதிமன்றச் செயல்முறைகள் மற்றும் நீதிமன்றத்தில் உங்கள் பங்கு போன்ற கேள்விகளுக்கு பதிலளித்தல்
- ஒவ்வொரு நீதிமன்ற திகதியின்போதும் எதை எதிர்பார்க்கவேண்டும் என்பதைப் புரிந்துகொள்வதற்கும் கோட்டில் நீங்கள் ஆஜராவதற்கு உங்களைத் தயார்ப்படுத்துவதற்கும் உங்களுக்கு உதவுதல்
- பிணை நிபந்தனைகள் மற்றும் நன்நடத்தை ஆணை போன்ற நீதிமன்ற பத்திரிகைகளின் பிரதிகளை உங்களுக்கு வழங்குதல்
- உங்கள் சார்பாக உங்களுடைய வழக்கிற்கு பொறுப்புள்ள போலீஸ் அதிகாரியை அல்லது அரச தரப்பு வக்கீலைத் தொடர்புகொள்ளுதல்
- நீதிமன்றச் செயல்முறை முழுவதுமாக உணர்ச்சிபூர்வ ஆதரவை தொடர்ந்து வழங்குதல்
- ஆலோசனை மற்றும் பாதுகாப்புத் திட்டம் அமைத்தல் போன்ற உங்களுக்குத் தேவைப்படக்கூடிய வேறு சேவைகளை பெற்றுக்கொள்வதற்காக சமூக அமைப்புகளுக்கு உங்களை வழிநடத்துதல்
- குடும்ப வன்முறை வழக்குகளுக்கு மொழிபெயர்ப்பாளரை ஏற்பாடுசெய்தல் மற்றும்/அல்லது விசேஷ தேவைகளைப் பூர்த்திசெய்தல்

- பாதிக்கப்பட்டவர் வழங்கும் வாக்குமூலத்தை புரிந்துகொள்ளவும் பூர்த்திசெய்யவும் உதவி வழங்குதல்.

இந்தத் திட்டத்தால் பின்வருவனவற்றை செய்ய முடியாது :

- உங்களுடைய சாட்சியாதாரங்களை பெற்றுக்கொள்ளுதல் அல்லது கலந்துரையாடுதல்
- குற்றச் சாட்டுகளை வாபஸ் பெறுதல்
- பிள்ளைப் பராமரிப்பு வழங்குதல் அல்லது அதற்கு ஏற்பாடுசெய்தல்
- நீதிமன்றத்திற்கு சென்றுவர போக்குவரத்து வழங்குதல்

**இந்தத் திட்டத்தை நான் எப்படி தொடர்புகொள்வது?**

பாதிக்கப்பட்டவருக்கு/சாட்சி சொல்பவருக்கு உதவும் திட்டமானது 54 நீதிமன்ற மாவட்டங்கள் அனைத்திலும் நீதித்துறை அதிபரின் அமைச்சுவினால் வழங்கப்படுகிறது.

உங்களுக்கு அருகாமையில் இருக்கும் அலுவலகத்தை கண்டறிய அழைக்கவும்

**பாதிக்கப்பட்டவருக்கான ஆதரவு இலக்கம்**

இலவச எண் 1-888-579-2888 அல்லது

கிரேட்டர் டொரொன்டோ பகுதியில் 416-314-2447

அல்லது கீழ்க்காணும் இணையத்தளத்திற்குச் செல்லவும்

**www.ontario.ca/victimservices**